முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 30.06.2026

OS. No. 75/2023

பிவா.சா.-1 – உதயகுமார்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் ஒரு ஒய்வு பெற்ற அரசு ஊழியர் என்றால் சரிதான். எனது மகன் Caad Training institution and Construction work நடத்தி வருகிறார் என்றால் சரிதான். வழக்கு ஏ மற்றும் பி பட்டிகை சொத்து ஆதியில் ஆண்டி நாடாருக்கு பாத்தியம் என்றால் ஏ பட்டிகை சொத்து என்றும் பி பட்டிகை சொத்து என்றும் கிடப்பில் இல்லை. ஆண்டி நாடாருக்கு 1090/1ல் 27.62 சென்ட் மட்டும் தான் பாத்தியம். ஆண்டி நாடாருக்கு 4 ஆண் மகன்கள். வழக்கு புல எண்ணில் வாதிக்கு சொத்து உண்டா என்றால் வாதிக்கு மேற்படி 27.62 சென்டில் 4 ல் 1 பாகம் மட்டும்தான் உண்டு.

2. வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்த மாதிரி வரைபடம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது முற்றிலும் தவறு. நான் தாக்கல் செய்த உத்தேச வரைபடம் யாரை வைத்து வரைந்தேன் என்றால் எனது மகனை வைத்து வரைந்தேன். அதில் எனது மகன் வரைந்ததாக எந்த முத்திரையோ, குறிப்போ இல்லை என்றால் சரிதான். வாதியின் கைவசம் உள்ள சொத்துக்கு 4 புறமும் கல் சுவர் இருக்கிறது என்றால் சரியல்ல. ஆண்டி நாடாருக்கு பாத்தியப்பட்ட 27.62 சென்டை சுற்றிதான் கல் சுவர் இருக்கிறது. புல எண். 1090/1ல் கீழ்பக்கம் கல் சுவர் இருக்கிறது. வாதி ஏ பட்டிகை சொத்தாக எவ்வளவு குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. பி பட்டிகை சொத்தாக வாதி எவ்வளவு வீஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளார் என்றால் பி பட்டிகை சொத்து என்று கிடையாது. வாதி குறிப்பிட்டிருப்பது 1.62 என்று நினைக்கிறேன். சரியாக தெரியவில்லை.

3. வாதி இந்த வழக்கில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் எத்தனை என்று தெரியாது. வரைபடம் கணேசனுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் மற்றும் பட்டா, ரசீது தாக்கல் செய்திருக்கிறார். கணேசனுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் 2001 ம் வருடத்திற்குரியது ஆகும். மேற்படி கணேசன் எழுதிக்கொடுத்த ஆவணம் பற்றி வழக்கிற்கு பிறகுதான் தெரியும். மேற்படி ஆவணத்தை ஆட்சேபித்து நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது செல்லாத ஆவணம் என்பதால் தாக்கல் செய்யவில்லை. கணேசன் 2001ல் ஏழுதிக்கொடுத்த சொத்துக்கு வடக்கு பக்கம் ஆண்டி நாடார் சொத்தாகும்.

4. கணேசன் வாதிக்கு 2001 ல் ஏழுதிக்கொடுத்த சொத்துக்கு வடக்குபுறம் கணபதியின் சொத்து என்றால் பிரிவின்றி இருக்கிறது. மேற்படி சொத்துக்கு வடக்குபக்கம் உள்ள சொத்து கணபதியின் அனுபவத்தில் உள்ள சொத்து என்றால் இல்லை. பிரபாகரன் வாங்கி இருக்கிறார். பிரபாகரன் 2001 ல் வாங்கினார். அது பற்றி வழக்கிற்கு பிறகுதான் தெரியும், பிரபாகரன் , பூமணி, பரமசந்திரன், மோகனிடம் இருந்து வாங்கினார். மேற்படி பிரபாகரன் வாங்கிய ஆவணத்தில் பதிவு அன்று நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். அதனால் மேற்படி ஆவணத்தின் பதிவு அன்று யார் யார் ஆஜர் ஆனார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

5. மேற்படி ஆவணம் வாதியை ஆள்மாறாட்டம் செய்து பதிவு செய்யப்பட்டதாக வாதி மோகன் காவல் துறையில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பொய் புகார். காவல் துறை அதிகாரிகள் மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையை தடய அறிவியல் பரிசோதைனைக்கு அனுப்பி அது நிலுவையில் இருக்கிறது என்றால் அது பற்றி தெரியாது. பிரபாகரன் பெயரில் உள்ள ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. பிரபாகரன் வாங்கியதாக சொல்லப்படும்

இடம் எவ்வளவு என்றால் தெரியாது.

6. பிரபாகரன் வாங்கிய இடம் அவர் கைவசம் உள்ளதா அல்லது மொத்தமாக இருக்கிறதா என்றால் மொத்தமாக தான் இருக்கிறது. உட்பிரிவாகவில்லை. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை முற்றிலும் தவறானது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறானது அதை ரத்து செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்யவில்லை என்றால் தவறானது என்று மனு தாக்கல் செய்யதுள்ளேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வாதியின் இடம் தனியாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது போல் ஸ்தலத்தில் இல்லை.

7. வழக்கு சொத்துக்கு தெற்கு பக்கம் பாலம் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி பாலம் எத்தனை அடி நீளம் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி பாலம் வழியாகதான் வாதி அவருடைய சொத்துக்கு வர முடியும் என்றால் சரியல்ல. பாலத்திற்கு அடுத்து என்னுடைய சொத்து. என்னுடைய சொத்தின் புல எண். 1076/9 ஏ ஆகும். மேற்படி சொத்தை நான் 1987 ம் ஆண்டு ஆவண எண்.1223/1987 படி கிரயம் வாங்கினேன். என்னுடைய எதிர் வழக்குரையிலும் , நீதிமன்ற ஆணையரிடம் நான் கொடுத்த மனுவில் ஆவண எண். 1123/1987 என்று குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரியல்ல. அச்சு பிழை ஆகியிருக்கலாம்.

8. புல எண். 1076/9 ஏ சொத்துக்கு கிழக்கே நான் கிரயம் வாங்கிய 3 சென்ட் இடமாகும். மேற்படி 3 சென்ட் இடமும் மேற்சென்ன ஆவண எண். 1223/1987 படி தான் கிரயம் வாங்கினேன். ஆவண எண். 1223/1987 ல் புல எண். 1090/1 ல் 3 சென்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.. 1090/1 ல் 3 சென்ட் என்பதற்கு மேற்சொன்ன ஆவணத்துடன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆவணத்தில் தென்மேற்கு மூலை என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன 3 சென்டை நான் தனியாக பிரிவு செய்யவில்லை என்றால் சரிதான். புலஎண் 1090/1 ல் 3 சென்டுக்கு முன் ஆவணம் என்னவென்றால் 4238/1120 ஆகும். மேற்சொன்ன மூல ஆவணத்தில் புல எண் 1090/1 க்கு வீஸ்தீரணம் 1 ½ சென்ட் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. மேற்சொன்ன 4238/1120 ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு உரிமையில்லாத புல எண்ணை என்னுடைய ஆவணத்தில் சேர்த்ததால் தான் நான் மூல ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புல எண்.1076/9 ஏ வடக்கு பக்கம் எத்தனை வீடுக்ள் உள்ளது என்றால் நிறைய வீடுகள் உள்ளது. யார் யாருக்கு வீடுகள் உள்ளது என்றால் எனது தந்தை மால் நாடார், கோபால கிருஷ்ண நாடார் மற்றும் ஒரு நூலகரின் வீடும் உள்ளது. நான் தாக்கல் செய்த உத்தேச வரைபடத்தில் பிவாசாஆ 6 ல் வீடுகள் இருப்பது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த வீடுகளுக்கு மின் இணைப்பு, பாதை தெற்கு பக்கம் தான் பாலம் வழியாகதான் செல்ல முடியும் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டுக்கு மட்டும்தான் என்னுடைய பூமி வழியாக மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது . மற்றவர்களுக்கு வேறு பாதை உள்ளது. என்னுடைய வீட்டிற்கு உள்ள மின் இணைப்பு வாதி பாதை என்று சொல்லும் இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

10. மின் இணைப்பு புல எண். 1090/1 ல் வருகிறது. அது என்னுடைய பூமி தான். பிவாசாஆ 6 ஆவணம் நான் பொய்யாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வாசாஆ 1 வரைபடத்தில் உள்ளது போல் தான் சொத்துகள் கிடப்பில் உள்ளது என்றாலும் அதை நான் வேண்டும் என்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மோகனுக்கும், எனக்கும் விரோதம் என்றால் 2022 ல் இருந்தே விரோதம். 96/2022 வழக்கு என் தகப்பனார்

தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கு கீழமை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்திருக்கோம். மேற்படி வழக்கிலும் வழக்கு சொத்துகள் ஆண்டி நாடார் சொத்து பாகம் பிரிக்கபடவில்லை என்று கட்சி செய்திருந்தோம் என்றால் சரியல்ல. 4 பேரும் வாங்கிய சொத்தில் 4 ல் 1 பாகம் உரிமை கேட்டு தாக்கல் செய்திருந்தோம்.

11. மேற்படி அ வஎண்.96/2022 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேல்முறையீடு செய்ததால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கில் தரப்பினர்களுக்கிடையே வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக முடிவு செய்யப்பட்டதால் மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆண்டி நாடார் மகன் கணேசனுக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். அதனால் கணேசன் மோகனை தத்து பிள்ளையாக எடுத்து வளர்த்து வந்தார் என்றால் எனக்கு அவஎண். 96/2022 வழக்கிற்கு பிறகுதான் தெரியும்.

12. மோகன் கணேசனின் சகோதரர் கணபதியின் மகன் என்றால் சரிதான். மோகனுக்கும் குழந்தைகள் இல்லை என்றால் தெரியாது. அதனால் வாதி மோகனின் சொத்துகளை அபரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிக்கு அனைத்து வகை கஷ்டங்களையும் நான் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. மோகன் வழக்கு ஏ பட்டிகை சொத்து வழியாக போக கூடாது என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் எங்கள் வீட்டை பராமரிக்க விடாமல் அடித்தார்கள். அதனால் புகார் கொடுத்தேன். 2022 ம் ஆண்டு மேற்படி புகார் கொடுத்தேன். அந்த புகாரில் என்னுடைய வீட்டுக்கு சற்று முன் மோகனின் பூமி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டிருக்கிறேன்.

13. மேற்படி புகார் வழக்கு பட்டிகை சொத்து வழியாக மோகனை போக விடாமல் செய்ய

கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. 1090/1 ல் 3 சென்ட் நான் கிரயம் பெற்றதாக சொல்லும் ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு மோசடியான ஆவணம் ஏற்படுத்தி வாதியின் இடத்திற்கு செல்ல விடாமல் கற்களை கொட்டி இடையூறு ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட எண்ணத்துடன் தான் கணபதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பிரபாகரன் உள்ளிட்டோர் மோசடி ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

14. என்னிடம் காட்டபடும் வாசாஆ 7 ல் உள்ள புகைப்படங்கள் வழக்கு சொத்துக்கான புகைப்படமா என்றால் இல்லை. என்னுடைய 3 சென்ட் இடத்திற்கான புகைப்படம். மேற்படி 3 சென்ட் இடத்துக்கு கீழ்புறம் தான் ஏ பட்டிகை சொத்து என்றாலும் புகைப்படத்தில் ஏ பட்டிகை சொத்துக்கு செல்லவிடாமல் தகரம் வைத்து தடுத்துள்ளது என்றால் சரியல்ல. அது காம்பவுண்ட் சுவருக்காக வைத்துள்ளது. என்னுடைய சொத்துக்கு வடக்கு பக்கம் புல எண்.1076/9 ஏ ல் பிரபாகரன் மனைவி வசித்து வருகிறார். பிரபாகரன் மனைவி தெற்கு பக்கம் உள்ள பாலம் வழியாக சென்று வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய தம்பி என்னுடைய இடம் வழியாக சென்று வருகிறார். பிரபாகரன் எனது தம்பி. புல எண். 1090/1 வடக்கு பக்கத்தில் உள்ள வீட்டில் விஜி வசித்து வருகிறார் என்றால் அது ஆண்டி நாடாரின் சொத்து. விஜி வசித்து வரும் வீடு உத்தேசமாக எவ்வளவு வீஸ்தீரணம் இருக்கும் என்றால் தெரியாது.

15. மேற்படி விஜி தெற்கு பக்கமுள்ள பாலம் வழியாகதான் சென்று வருகிறார் என்றால் சரிதான். ஆவணம் ஏதும் இல்லை. வாய்மொழியாக சென்று வருகிறார்கள். வாய்மொழி அனுமதி யார் கொடுத்தார்கள் என்றால் எனது அப்பா. விஜியின் சொத்துக்கு 1090/1 ல் உள்ள மின் கம்பத்தில் இருந்து மின் இணைப்பு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி சொத்து

வழியாகதான் வாதி அவருடைய சொத்துக்கு சென்று வருகிறார் என்றால் சரியல்ல. வாதியின் சொத்துக்கு தெற்குபக்கம் சிவலிங்கம் சொத்து இருக்கிறது. சிவலிங்கம் எங்கள் குடும்ப உறுப்பினர் இல்லை.

16. சிவலிங்கம் சொத்து வழியாக வாதி போய் வருகிறார் என்று ஆணையரிடம் நான் காண்பித்தேனா என்றால் இல்லை.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.